# மிக முக்கிய விதிகள் & நிபந்தனைகள்

SBI card

## மிக முக்கிய விதிகள் & நிபந்தனைகள் - எஸ்பிஐ கார்ப்பரேட் கார்டு (தனிப்பட்ட பொறுப்பு வாடிக்கையாளர்களுக்கு பொருந்தும்)

1. **கட்டணம் மற்றும் செலவினங்கள்**

A. சேரும் கட்டணம், வருடாந்திரக் கட்டணங்கள் & புதுப்பித்தல் கட்டணங்கள் (பொருந்தினால்)

சேரும் கட்டணம், வருடாந்திரக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் எஸ்பிஐ கார்ப்பரேட் கார்டுகளுக்கு (எஸ்பிஐ கார்டு) விதிக்கப்படும். இந்தக் கட்டணம் ஒரு கார்ப்பரேட்டிலிருந்து மற்றொரு கார்ப்பரேட்டுக்கு வேறுபடலாம். மேலும் ஒரு கார்டு உரிமையாளருக்கும் இன்னொரு கார்டு உரிமையாளருக்கும், ஒரு சலுகைக்கும் மற்றொரு சலுகைக்கும் வேறுபடலாம். கார்ப்பரேட் கார்டுக்காக விண்ணப்பிக்கும் நேரத்தில், கார்ப்பரேட்டுக்கும் கார்டு உரிமையாளருக்கும் இந்த கட்டணங்கள் தெரிவிக்கப்படும். பொருந்தக்கூடிய சேரும் கட்டணங்கள் மற்றும் வருடாந்திரக் கட்டணங்கள், கார்டு உரிமையாளர் கணக்கிலிருந்து நேரடியாக வசூலிக்கப்படும். அது வசூலிக்கப்பட்ட அந்த மாதத்தின் கார்டு அறிக்கையிலும் காண்பிக்கப்படும்.

B. தொகை முன்பணக் கட்டணம் (பொருந்தினால்)

அவசரக்காலங்களில், வெளிநாடுகளில் உள்ள ஏடிஎம்களிலோ அல்லது இந்தியாவில் உள்ள பண மையங்களிலோ/ஏடிஎம்களிலோ இருந்து, பணம் எடுப்பதற்கு கார்டு உரிமையாளர் அந்த கார்டைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அத்தகைய அனைத்து செலவினங்கள் மீதும் பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படும். அடுத்த அறிக்கையில் கார்டு உரிமையாளருக்கு அதன் ரசீது வழங்கப்பட்டிருக்கும். உள்நாட்டு எஸ்பிஐ ஏடிஎம்கள்/ பண மையங்களில் ரூ.450 வரையிலான தொகை அல்லது 2.5% பரிவர்த்தனைக் கட்டணம் (இதில் எது அதிகமோ அது). பிற உள்நாட்டு ஏடிஎம்களில், ரூ.450 வரையிலான தொகை அல்லது 2.5% (இதில் எது அதிகமோ அது). சர்வதேச ஏடிஎம்களில் 3% அல்லது ரூ.450 (இதில் எது அதிகமோ அது) என கட்டணம் விதிக்கப்படும். பரிவர்த்தனைக் கட்டணம் எஸ்பிஐ கார்ட்ஸ் அண்ட் பேமெண்ட் சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் எஸ்பிஐ கார்ட்ஸ் அண்ட் பேமெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது) இன் விருப்பப்படி மாற்றத்திற்கு உட்படும். பணம் பெறப்பட்ட தேதியிலிருந்து, பணம் திரும்ப கட்டப்படும்வரை, அனைத்து பண ரீதியான உதவிகளுக்கும் சேவைக் கட்டணம் விதிக்கப்படும். தற்போது ஒரு மாதத்திற்கு 3.35% சேவைக் கட்டணமாக [ஒரு வருடத்திற்கு 40.2%] இருக்கிறது. இது எஸ்பிஐசிபீஎஸ்எல் மேற்கொள்ளும் தனிப்பட்ட முடிவைப் பொருத்து மாறுபடலாம்.

C. தொகை செலுத்துவதற்கான கட்டணம்

கார்டு உரிமையாளர் எந்த எஸ்பிஐ கிளைக்கும் சென்று, கார்ப்பரேட் கார்டு எண் மற்றும் சம்பள அறிக்கையின் தொகையையும் குறிப்பிட்டு, அதே கிளை கவுண்டரில் பணத்தை செலுத்தி எஸ்பிஐ கார்டின் தவணைகளைச் செலுத்தலாம். உங்கள் கட்டணத்தைச் செலுத்தி முடித்தவுடன், தொகையை பெற்றுக் கொண்டதற்கான உடனடி ஒப்புதல் சீட்டு வழங்கப்படும். இந்த சேவை, ரூபாய் 100 + பொருந்தும் வரிவிதிப்புகள் உடன் கிடைக்கிறது.

D. செலவினங்கள்

i. கார்டு உரிமையாளர்களுக்கு எஸ்பிஐசிபிஎஸ்எல் வழங்கிய குறிப்பிட்ட சேவைகளுக்கு அல்லது கார்டு உரிமையாளர் தனது கார்டு கணக்கு

தொடர்பான தவணைத் தவறுதலுக்கு அவ்வப்போது பொருந்தக்கூடிய செலவினங்கள் மற்றும் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

ii. எஸ்பிஜசிபிஎஸ்எல் கார்டு உரிமையாளருக்கு உரிய அறிவிப்புடன் அது பொருத்தமானது என்று கருதும் எந்தவொரு செலவினங்கள் அல்லது கட்டணங்களை அவ்வப்போது மாற்றுவதற்கு அல்லது புதிய செலவினங்கள் அல்லது கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

E. வட்டியில்லாக் கருணைக் காலம்

வட்டியில்லா இலவசக் கடன் காலம், வணிகம் செய்பவரின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதைப் பொருத்து 20 முதல் 50 நாட்கள் வரையிலான வரம்பிற்குள் இருக்கலாம். எப்படி இருப்பினும், முந்தைய மாதத்தின் தொகையை முழுமையாகச் செலுத்தவில்லை என்றாலோ அல்லது ஏடிஎம்/பண மையத்திலிருந்து கார்டு உரிமையாளர் பணத்தை எடுத்திருந்தாலும் இது பொருந்தாது.

F. நிதி கட்டணங்கள் (சேவைக் கட்டணங்கள்)

கார்டு உரிமையாளர் தனது நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்த வேண்டாம் என்று தேர்வு செய்தால், பரிவர்த்தனை நாளிலிருந்து அனைத்து பரிவர்த்தனைகளுக்கும், மேலும் கார்டு உரிமையாளர் பெற்ற அனைத்து முன்பணத்திற்கும் அவை திருப்பிச் செலுத்தப்படும் வரை மாதாந்திர சதவீத விகிதத்தில் நிதிக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

கார்ப்பரேட் அல்லது கார்டு உரிமையாளர், கட்டண தவணைத் தேதிக்கு முன்பாக (PDD) மொத்த தொகை தவணையின் (TAD) பகுதி தொகை மட்டும் அல்லது கட்டணம் செலுத்தாமல் இருந்தால்: அதாவது, வாடிக்கையாளருக்கு முந்தைய மாதங்களிலும், தற்போதைய மாதத்திலும் நிலுவைத்தொகை கட்ட வேண்டியிருந்தால். தொகையின் தவணைத் தேதிக்கு முன்பாக மொத்த தவணைத் தொகையையும் செலுத்திவிட்டால், கட்டணத் தேதி வரையில் இறுதி நிலுவைத் தொகையின் மீது நிதிக் கட்டணம் விதிக்கப்படும்.

கார்டு வட்டி விகிதம் மாறிக்கொண்டே இருக்கும். கார்டு உரிமையாளரின் பயன்பாட்டைப் பொருத்தும், கட்டணம் செலுத்தும் முறைகளைப் பொருத்தும், காலவாரியான மதிப்பீடுகளின் அடிப்படையிலும் இந்த விகிதம் மாறும். நிதிச் செலவினங்கள் விகிதக் கட்டணங்கள், பரிவார்த்தனை நாளிலிருந்து அதிகபட்சமாக மாதத்திற்கு 3.35% வரை (வருடத்திற்கு 40.2%) அதிகரிக்கலாம்.எஸ்பிஜசிபிஎஸ்எல்லின் தன்னிச்சையான முடிவின்படி இது மாற்றங்களுக்கு உட்பட்டது. நிதிச் செலவினங்கள், கட்டப்பட வேண்டியிருந்தால், வரிவிதிப்புகளுக்கு உட்படும். கார்டில் இருக்கும் மீதத் தொகை முழுவதுமாக கட்டப்படும் வரை கார்டு உரிமையாளரின் கணக்கில் இந்த வரித்தொகை பற்றி எடுக்கப்படும். கார்டு உரிமையாளர் தனது நிலுவைத் தொகையை செலுத்த வேண்டிய தேதிக்குள் முழுமையாக செலுத்த வேண்டாம் என்று தேர்வு செய்தால், அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் மற்றும் கார்டு உரிமையாளர் பெறும் அனைத்து முன்-பணத்திற்கும் விதிக்கப்படும் நிதிக் கட்டணத்தின் குறைந்தபட்ச தொகை பொருந்தக்கூடிய வரிகளைத் தவிர, தலா ரூ .25 ஆக இருக்கும்.

a ) தொகை முழுவதுமாக செலுத்தப்படும் வரை, பரிவர்த்தனைத் தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையின் மீதான நிதிக் கட்டணங்கள் (பொருந்தினால்) விதிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு** 1 கார்டு அறிக்கைத் தேதி - ஒவ்வொரு மாதமும் 2ம் தேதி மார்ச் 3, 2017 - ஏப்ரல் 2 2017-க்கு இடையிலான பரிவர்த்தனைகள் பின்வருமாறு:
1. சில்லறைக் கொள்முதல் ரூ. 5000 - மார்ச் 10, 2017
2. பணம் எடுப்பு (பொருந்தினால்) 7000 ரூபாய் - மார்ச் 30 2017 அன்று
மார்ச் 2, 2017 அறிக்கையில் முன் எடுத்து வரப்பட்டுள்ள முந்தைய நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்று வைத்துக்கொண்டால், கார்டு உரிமையாளரின் ஏப்ரல் 2, 2017 அறிக்கையில் ரூ. 7000 ரொக்கம் எடுத்ததற்கு பொருந்தும் விகிதத்தில் 3 நாட்களுக்கான நிதிக் கட்டணங்களுடன் ரூ. 12,000 -ற்கான பரிவர்த்தனைக் காட்டப்படும். 22 ஏப்ரல் 2017 க்குள் நிலுவைத்தொகையை கார்டு உரிமையாளர் செலுத்த வேண்டும். அதாவது, அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள். எஸ்பிஐ கார்ப்பரேட்டு கார்டு கணக்கு வைத்திருக்கும் கார்டு உரிமையாளருக்கான அனைத்துக் கட்டணங்களும், மொத்தமாக தவணைத் தேதிக்குள் கட்டி முடிக்கப்படவேண்டும். முதலில் வரிவிதிப்புக் கட்டணங்களை தொடர்ந்து கட்டணங்கள் மற்றும் செலவினங்கள், வட்டிக் கட்டணங்கள், சில்லறை நிலுவைத்தொகை மற்றும் இறுதியாக மீதத்தொகை (ஏதேனும் இருந்தால்) என்ற வரிசையில் கட்டணங்கள் கட்டப்படும்.
a) முந்தைய அறிக்கையிலிருந்து எந்தவொரு முந்தைய நிலுவையாவது தொடர்ந்து முன் எடுத்து வரப்பட்டு இருந்தால், முந்தைய அறிக்கைத் தேதியிலிருந்து நிதி கட்டணங்கள் விதிக்கப்படும் (பரிவர்த்தனை தேதியிலிருந்து நிதிக் கட்டணம் விதிக்கப்பட்டு, வட்டியில்லாமல் வரிவிதிக்கப்பட்ட சில்லறை நிலுவைத்தொகை இருந்தால் தவிர).

b ) ஒருவேளை அறிக்கையில் நிலுவையில் பணம் மீதம் இல்லையென்றாலும், முந்தைய அறிக்கையிலிருந்து தொடர்ந்து முன் எடுத்து வரப்படவில்லை என்றாலும், நிலுவையில் உள்ள சில்லறை பாக்கி கட்டணத் தவணைத் தேதியில் முழுவதுமாக கட்டப்பட்டிருந்தாலும், அந்த தொகையின் மீது நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படமாட்டாது.
**எடுத்துக்காட்டு** 2 - கார்டு அறிக்கைத் தேதி - ஒவ்வொரு மாதமும் 2ம் தேதி
2017 ஜனவரி 3 முதல் 2017 பிப்ரவரி 2 வரையிலான பரிவர்த்தனைகள் பின்வருவன:
1. சில்லறைக் கொள்முதல் ரூ. 10000 - 2017 ஜனவரி 5
2. ஆன்லைன் கொள்முதல் ரூ. 30000 - 2017 ஜனவரி 15
ஜனவரி 2, 2017 அறிக்கையில் முன் எடுத்து வரப்பட்டுள்ள முந்தைய நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்று வைத்துக்கொண்டால், ரூ. 40000-ற்கான பரிவர்த்தனைகளைக் காட்டும் பிப்ரவரி 2, 2017 அறிக்கையை கார்டு உரிமையாளர் பெறுவார். பிப்ரவரி 22, 2017-க்குள் கட்ட வேண்டிய தொகைக்கு கார்டு உரிமையாளர் கட்டணம் செலுத்தவேண்டும். அதாவது, அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்கள். எஸ்பிஐ கார்ப்பரேட்டு கார்டு கணக்கு வைத்திருக்கும் கார்டு உரிமையாளருக்கான அனைத்துக் கட்டணங்களும், மொத்தமாக தவணைத் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். முதலில் வரிவிதிப்புக் கட்டணங்களை தொடர்ந்து கட்டணங்கள் மற்றும் செலவினங்கள், வட்டிக் கட்டணங்கள், சில்லறை நிலுவைத்தொகை மற்றும் இறுதியாக மீதத்தொகை (ஏதேனும்

இருந்தால்) என்ற வரிசையில் கட்டணங்கள் கட்டப்படும். முந்தைய அறிக்கையிலிருந்து ஏதாவது முந்தைய நிலுவைத் தொகையாவது தொடர்ந்துக் கொண்டிருந்தால், முந்தைய அறிக்கைத் தேதியிலிருந்து நிதி கட்டணங்கள் விதிக்கப்படும் (பரிவர்த்தனை தேதியிலிருந்து நிதிக் கட்டணம் விதிக்கப்பட்டு, வட்டியில்லாமல் வரிவிதிக்கப்பட்ட சில்லறை நிலுவைத்தொகை இருந்தால் தவிர).

**ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச கட்டணம் மட்டுமே செலுத்துவதால், திருப்பிச் செலுத்துதல் பல ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கு வட்டி செலுத்துதலுடன் நீடிக்கும்.**

**எடுத்துக்காட்டு 3:** கார்டு அறிக்கைத் தேதி - ஒவ்வொரு மாதமும் 2ம் தேதி.

டிசம்பர் 3, 2016 - ஜனவரி 2, 2017-க்கு இடையில் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள்

1. ரூ. 500-க்கான சில்லறை வர்த்தகம் - டிசம்பர் 15, 2016 அன்று
2. ரூ. 600-க்கான ஆன்லைன் வர்த்தகம் - டிசம்பர் 20, 2016 அன்று

டிசம்பர் 2, 2016 அறிக்கையில் முன் எடுத்து வரப்பட்டுள்ள முந்தைய நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்று வைத்துக்கொண்டால், ரூ. 1100 அளவிற்கான பரிவர்த்தனைகளைக் காட்டும் பிப்ரவரி 2, 2017 அறிக்கையை கார்டு உரிமையாளர் பெறுவார், மொத்த தவணைத் தொகை ரூ. 1100. ஜனவரி 22, 2017-க்குள் கட்ட வேண்டிய உரிய நிலுவைத் தொகையை கார்டு உரிமையாளர் செலுத்தவேண்டும். அதாவது, அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்கள்.

பகுதித் தொகையான 500 ரூபாயை கார்டு உரிமையாளர் செலுத்துவதாக வைத்துக்கொண்டால், 2017 ஜனவரி 22-இல் நிதிக் கட்டணங்கள் உரிய விகிதத்தில் வசூலிக்கப்படுவதுடன் மொத்த நிலுவைத்தொகையில் சேர்க்கப்படும். கருத்தில் கொள்ளும் மாதாந்திர 3.35% பயனுள்ள வீதம்.,

நிதிக் கட்டண கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்:

39 நாட்களுக்கு (டிசம்பர் 15 முதல் ஜனவரி 22 வரை) ரூ. 500 பாக்கின் மீது:
(3.35*12) * (39/365) *500/100 = ரூ. 21.48

34 நாட்களுக்கு (டிசம்பர் 20 முதல் ஜனவரி 22 வரை) ரூ. 600 பாக்கின் மீது:
(3.35*12) * (34/365) *600/100 = ரூ. 22.47

10 நாட்களுக்கு (ஜனவரி 22 முதல் பிப்ரவரி 2 வரை) ரூ. 600 பாக்கியின் மீது: (3.35*12) * (10/365) *600/100 = ரூ. 6.61

விதிக்கப்பட்ட மொத்த வட்டி = ரூ. 50.56

பிப்ரவரி 3, 2017 - மார்ச் 2, 2017-க்கு இடையில் நடந்த பரிவர்த்தனைகள்

1. பிப்ரவரி 3, 2017 அன்று தொடக்க பாக்கி ரூ 650.56
2. பிப்ரவரி 5, 2017 அன்று சில்லறை வர்த்தகம் ரூ. 1000
3. ரூ. 3000-கான ஆன்லைன் வர்த்தகம் - பிப்ரவரி 15, 2017 அன்று

பிப்ரவரி 2, 2017 அறிக்கையில் முந்தைய நிலுவைத் தொகை 650.46 முன் எடுத்து வரப்பட்டால், பிப்ரவரி 22, 2017-இல் பாக்கிக்கான கட்டணத்தை கார்டு உரிமையாளர் கட்ட வேண்டும். அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்கள்.

பிப்ரவரி 15-ஆம் தேதி அன்று கார்டு உரிமையாளர் முழு கட்டணத்தையும் கட்டுவதாக வைத்துக்கொள்வோம். அதாவது கட்டணத் தவணை தேதிக்குள். ஒரு மாதத்துக்கு 3.35% விகிதம் என்பதைக் கணக்கில் கொண்டு, முடிவு செய்யப்பட்ட நிதிக் கட்டண கணக்கு பின்வருமாறு-

12 நாட்களுக்கு (பிப்ரவரி 3 - பிப்ரவரி 15) ரூ. 650.56 பாக்கியில்:
(3.35*12) *(12/365) * 650.56/100 = ரூ. 8.60
விதிக்கப்பட்ட மொத்த வட்டி = ரூ. 8.60
நிலுவையிலுள்ள கொள்முதல் தொகை, வட்டிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் ஏதேனும் இருந்தால், பொருந்தக்கூடிய வரித்தொகைகள் அனைத்தும் மார்ச் 2-ஆம் தேதியிடப்பட்ட அறிக்கையில் மொத்த தவணைத் தொகையாக வெளிப்படும்.

**G. தாமதமாகக் கட்டுவதற்கான கட்டணங்கள்**

**தவணைக் கட்டண தேதிக்குள் மொத்த தவணைத் தொகை கட்டப்படாமல் இருந்தால், தாமதமாகக் கட்டுவதற்கான கட்டணங்கள் விதிக்கப்படும்.**

**மொத்த தவணைத் தொகை ரூ. 0-200-க்குள் இருந்தால், எதுவும் இல்லை;**

**மொத்த தவணைத் தொகை ரூ. 200-க்கு மேற்பட்டு ரூ. 500-க்குள் இருந்தால், ரூ. 100.**

**மொத்த தவணைத் தொகை ரூ. 500-க்கு மேற்பட்டு ரூபாய் 1000-க்குள் இருந்தால், ரூ. 400.**

**மொத்த தவணைத் தொகை ரூ. 1000-க்கு மேற்பட்டு ரூ. 10,000-க்குள் இருந்தால், ரூ. 500.**

**மொத்தத் தொகை ரூ. 10,000-ற்கு அதிகமாக இருந்தால் ரூ. 750 ஆக இருக்கும்**

**எடுத்துக்காட்டு 1** - கார்டு அறிக்கைத் தேதி - ஒவ்வொரு மாதமும் 2ம் தேதி.
பிப்ரவரி 3, 2017 - மார்ச் 2, 2017-க்கும் இடையில் நடந்த பரிவர்த்தனைகள் பின்வருமாறு:
1. சில்லறைக் கொள்முதல் ரூ. 2000 - பிப்ரவரி 8, 2017 அன்று
2. ஆன்லைன் கொள்முதல் ரூ. 2500 - பிப்ரவரி 19, 2017 அன்று

பிப்ரவரி 2, 2017 அறிக்கையில் முன் எடுத்து வரப்பட்டுள்ள முந்தைய நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்று வைத்துக்கொண்டால், ரூ. 4500 அளவிற்கான பரிவர்த்தனைகளைக் காட்டும் மார்ச் 2, 2017 அறிக்கையை கார்டு உரிமையாளர் பெறுவார். மார்ச் 22, 2017-ற்குள் கார்டு உரிமையாளர் நிலுவைத் தொகை கட்ட வேண்டும். அதாவது அறிக்கைத் தேதியிலிருந்து 20 நாட்களில். கார்டு உரிமையாளர் முழுத் தொகையையும் (அதாவது, மொத்த தவணைத் தொகை) கட்டண தவணைத் தேதிக்குள் செலுத்தவில்லையென்றால், தாமதமாக கட்டுவதற்கான அபராதமாக ரூ. 500 விதிக்கப்படும் (மொத்த தவணைத் தொகை ரூ. 1001 - ரூ. 10000-க்குள் இருந்தால், ரூ. 500).

H. அதிக வரம்புக்கான கட்டணங்கள் - கார்ப்பரேட்டு கார்டுகளுக்குப் பொருந்தாது

I. கட்டண நிராகரிப்பு அபராதம்

கட்டணம் நிராகரிப்பிற்கு உள்ளானால், கார்ப்பரேட்டு கார்டு உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையில் 2% அபராதத் தொகையாக விதிக்கப்படும், குறைந்தபட்ச அபராதத் தொகை ரூ. 350-ற்கு உட்பட்டது.

J. பிற கட்டணங்கள் (பொருந்தினால்):

• கார்டு மாற்றீடு கட்டணம்: ரூ. 100/- - ரூ. 250/-

·செக் கட்டணம்: ரூ.100 (ரூ. 2000 வரை செக் மூலமாக பணம் செலுத்தப்பட்டால்)
· செக் பிக் அப் கட்டணம்: 90 ரூபாய்
· அறிக்கை மீட்டெடுப்புக் கட்டணம்: எதுவும் இல்லை

அன்னிய செலாவணி பரிவர்த்தனை கட்டணம்: 3.5% வரை அன்னிய செலாவணி பரிவர்த்தனையை ஐ.என்.ஆராக மாற்ற பயன்படுத்தப்படும் மாற்று வீதம் விசா/மாஸ்டர்கார்டு மூலம் தீர்மானிக்கப்படும், இருந்த போதிலும், எஸ்பிஐ கார்டுடன் பரிவர்த்தனை தீர்க்கப்பட்ட தேதியில் அவர்கள் நிர்வகிக்கும் மாற்று விகிதங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மற்றும் அது பரிவர்த்தனை செய்யப்பட்ட அதே தேதியாக இருக்காது. விசா/மாஸ்டர் கார்டு மூலமாக இந்தியப் பணமாக மாற்றப்பட்டு பகிரப்பட்ட தொகையில் அன்னிய செலாவணி பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும்.

2. **வரம்புகள்**
கடன் வரம்பு மற்றும் தொகை வரம்பு (பொருந்தினால்) கார்டு உரிமையாளர்களுக்கு விதிக்கப்படும். கார்ப்பரேட் கார்டு திட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்ற விதிமுறைகளின் அடிப்படையில் இது விதிக்கப்படும். கார்டு கொடுக்கப்படும் அந்த நேரத்தில் கார்டு உரிமையாளரிடம் இந்த வரம்புகள் தெரிவிக்கப்படும். கடன் வரம்பு மற்றும் தொகை வரம்பு (பொருந்தினால்) கார்டு உரிமையாளருக்கு ஒவ்வொரு அறிக்கையிலும் தெரிவிக்கப்படும். அறிக்கை தயாராகும் போது கிடைக்கும் கடன் வரம்பு (அதாவது, பயன்பாட்டுக்கு கிடைக்கும் கடன் வரம்பு) அறிக்கையின் ஒரு பகுதியாக வழங்கப்படும்.
எஸ்பிஐசிபிஎஸ்எல் அவ்வப்போது கார்ப்ரேட் நிலை வரம்பை மதிப்பாய்வு செய்யக்கூடும், மேலும் கார்ப்பரேட் கார்டு திட்ட மேலாளரிடமிருந்து பெறப்பட்ட உள் அளவுகோல்கள் அல்லது அடிப்படைக் கோரிக்கையின் அடிப்படையில் அதை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம். இது போன்ற மாற்றங்களும் கார்டு உரிமையாளர்களின் வரம்பில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்தத் தகவல் கார்ப்பரேட் கார்டு திட்ட நிர்வாகிக்கு அளிக்கப்படும். அவர் அதை உரிய கார்டு உரிமையாளருக்குத் தெரியப்படுத்துவார். கார்டு உரிமையாளர்கள் கடன் வரம்பை அதிகரிக்க விரும்பினால், அவர்கள் எஸ்பிஐசிபிஎஸ்எல்-க்கு எழுதி, வருமானத்தை அறிவிக்கும் நிதி ஆவணங்களை வழங்கலாம். எனினும், எஸ்பிஐசிபிஎஸ்எல், அதன் சொந்த விருப்பப்படி மற்றும் பெறப்பட்ட கோரிக்கை மற்றும் கார்ப்பரேட் கார்டு திட்ட மேலாளரின் ஒப்புதலின் அடிப்படையில், கார்டு உரிமையாளரின் கடன் வரம்பை அதிகரிக்கக்கூடும்.

3. **பில்லிங் மற்றும் அறிக்கை**
a ) எஸ்பிஐசிபிஎஸ்எல் குறிப்பிட்ட காலத்தில் கார்டு செயலில் இருந்திருந்தால், கார்டு உரிமையாளருக்கு கடைசி அறிக்கையிலிருந்து வரவு வைக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் கார்டு உரிமையாளர் கணக்கில் டெபிட் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளின் மாதாந்திர அறிக்கையை அனுப்பும். ஒரு முன்-தீர்மானிக்கப்பட்ட தேதியில், பதிவேட்டிலுள்ள மின்னஞ்சல் ஐடியில் அறிக்கையை எஸ்பிஐசிபிஎஸ்எல் மின்னஞ்சல் மூலம் அனுப்பும்.

b) எஸ்பிஐ கார்ப்பரேட்டு கார்டு, கார்டு உரிமையாளருக்கு சுழல் நிதி வசதியைக் கொடுக்காது. அபராதத் தொகையைத் தவிர்க்க, எந்த குறிப்பிட்ட அறிக்கையின் மொத்த நிலுவைத் தொகையும் முழுவதுமாக செலுத்தப்படவேண்டும்.

c) அடுத்தடுத்த அறிக்கைகளில் கார்டுக்கான நிலுவைத் தொகை கட்டணம் செலுத்தியது தெரியப்படுத்தப்பட்டிருக்கும். உள்வரும் வரிக் கடன் தொடர்பான எந்த முரண்பாடு அல்லது வரி தொடர்பான எந்த ஒரு விஷயமும் கார்ப்பரேட் கார்டு வழங்குபவருக்கு, அறிக்கை அளிக்கப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் அனுப்பப்படவேண்டும்.

d) கார்டு உரிமையாளரின் கார்டு நிலுவைத் தொகை வரிக் கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் பிற செலவினங்கள், வட்டிக் கட்டணங்கள், கொள்முதல் மற்றும் முன்-பணம் என்ற வரிசையில் பெறப்படும் கட்டணம் சரி செய்யப்படும். கார்ப்பரேட் கார்டு வழங்குநர் பொருத்தமான ஜிஎஸ்டி இணக்கங்களை மேற்கொள்ள உதவும் வகையில் கார்டு உரிமையாளர் சரியான நேரத்தில் தகவல்களை வழங்குவதற்கு பொறுப்பேற்க வேண்டும், இதனால் கார்ப்பரேட் கார்டு வழங்குபவர் தயாரித்த பொருட்களின் உள்ளீட்டு வரிக் கடனைக் கார்டு உரிமையாளர் பெற முடியும். கார்டு உரிமையாளர் வழங்கும் தவறான தகவல்களின் காரணமாக அல்லது கார்டு உரிமையாளரின் ஏதாவது செயல் அல்லது விடுபடுபடுவதின் காரணமாக உள்ளீட்டு வரிக் கடன் இழப்பு அல்லது கார்டு உரிமையாளருக்கு உள்ளீட்டு வரிக் கடன் பெறுவதில் தாமதம் ஏற்படுவதற்கு கார்டு வழங்குபவர் பொறுப்பேற்க மாட்டார்.

e) கார்டு கணக்கிற்காக செய்யப்படும் செலுத்தல்கள் கீழ் காணும் பல வழிகளுள் ஒன்றின் மூலமாக செய்யப்படுகிறது:

- www.sbicard.com-இல் உள்நுழைந்து, உங்கள் எஸ்பிஐ ஏடிஎம் மற்றும் டெபிட் கார்டு வழியாகவும் அல்லது பேநெட் வழியைப் பயன்படுத்தி நெட்பேங்கிங் மூலமாகவும் கட்டணம் செலுத்தலாம்.
- செக் அல்லது டிடி-யை அஞ்சல் வழியாக அறிக்கைக்குப் பின்புறமுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலமும் செலுத்தலாம்.
- உங்கள் நகரத்திலுள்ள எந்த எஸ்பிஐ கார்டு ட்ராப் பெட்டிகள் அல்லது தகுதி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கிளைகளில் செக் அல்லது டிராஃப்ட்டை போடுவதன் மூலமோ செலுத்தலாம். செக் அல்லது வரைவோலையை, "எஸ்பிஐ கார்டு எண் xxxxxxxxxxxxxxxx"க்கு கட்டணம் செலுத்தும் வகையில் இருத்தல் வேண்டும்.
- என்ஏசிஎச்: தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் தேசிய தானியங்கி தீர்வு (NACH) மூலம் பணம் செலுத்தலாம்.
- என்இஎஃப்டி:
  பயனாளர் பெயர்: ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, வணிக கிளை (04079), 6 வது மாடி, பாம் கோர்ட், மஹாராணா பிரதாப் சவுக், எம்.டி.ஐ அருகில், குருகிராம் -122001
  வங்கி கணக்கு எண் - 39735563903
  ஐஎஃப்எஸ்சி குறியீடு: SBIN0004079

f) எஸ்பிஐ கார்டு, பில் நிலுவைத்தொகை கட்டணங்களைச் செலுத்த பல வழிமுறைகளை வழங்குகிறது. மாதாந்திர அறிக்கையின்

பின்பக்கத்திலும், எஸ்பிஐ கார்டு வலைதளத்திலும் அவை கொடுக்கப்பட்டுள்ளன. கார்டு உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு முன்பணமும் எதிர்கால செலவினங்களுக்கான முன்பணமாகக் கருதப்படுமே தவிர, வேறு எந்தவொரு செலவினங்கள்/கட்டணங்களுக்காக அல்ல.

g) பில்லிங் சர்ச்சைகள்: கார்டு உரிமையாளர் அறிக்கை தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எந்தவொரு முரண்பாடுகளையும் எஸ்பிஐசிபிஎஸ்எல்-க்கு அறிவித்து, மற்றும் அந்த முரண்பாடுகள் உண்மை என்று எஸ்பிஐசிபிஎஸ்எல் கண்டுப்பிடித்தாலன்றி, அறிக்கைகளின் அனைத்து உள்ளடக்கங்களும் கார்டு உரிமையாளரால் சரியானவை மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை எனக் கருதப்படும். அத்தகைய தகவல் கிடைத்தால், எஸ்பிஐசிபிஎஸ்எல் தற்காலிகமாக கட்டணத்தைத் திரும்ப பெறலாம். அடுத்தபடி விசாரணைகள் முடிந்ததும், அத்தகைய கட்டணங்களின் கடன்பாடு கார்டு உரிமையாளரின் கணக்கில் இருந்தால், கட்டணம் அடுத்த அறிக்கையில் நிறுவப்படும்.

h) வாடிக்கையாளர் குறை: தீர்ப்பு குறை தீர்ப்பதற்கான அனைத்துக் கோரிக்கைகளும், பின்வரும் முகவரியில் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; தலைமை- கார்ப்பரேட் வாடிக்கையாளர் நிர்வாகம், டிஎல்எஃப் இன்ஃபினிட்டி டவர்ஸ், டவர் சி, 12வது மாடி, ப்ளாக் 2, கட்டடம் 3, டிஎல்எஃப் சைபர் நகரம், குருகிராம் - 122002 (ஹரியானா) இந்தியா. கார்ப்பரேட் கார்டு திட்ட நிர்வாகியோ, கார்டு உரிமையாளரோ ஏதேனும் கேள்விகளுக்கு அல்லது குறைதீர்ப்பதற்கு எஸ்பிஐசிபிஎஸ்எல்-ஐத் தொடர்புகொள்ளலாம். sbicorporate.services@sbicard.com-க்கு அல்லது மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 24 மணிநேர உதவி மையத்துக்கு அழைக்கலாம்: 1860 180 1290 , 39 02 02 02 (உள்ளூர் எஸ்டீடி குறியீட்டை முன்சேர்க்கவும்) - கார்டு கணக்கில் உள்ள நிலுவைத் தொகைக்கான கட்டணம், தபால், ஃபேக்ஸ், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் மற்றும்/அல்லது மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்துவது, மற்றும் தொடர்-காணல் மூலம் தவணையைச் சேகரிப்பார்கள். எந்த மூன்றாம் நபர் தரப்பு அமர்த்தப்பட்டாலும், கடன் சேகரிப்பு தொடர்பான நடத்தை விதிகளை முழுவதுமாக கடைபிடிக்க கடமைப்பட்டுள்ளார்கள். கார்டு கணக்கில் உள்ள மொத்த நிலுவைத் தொகை, எந்தவொரு செலவினக் கட்டணங்களுடன் சேர்ந்து, இதுவரை கார்டு கணக்கில் வசூலிக்கப்படவில்லை என்றால், அது உடனடியாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் கார்டு உரிமையாளருக்கு திவால் நிலை அல்லது இறப்பு ஏற்பட்டால் எஸ்பிஐசிபிஎஸ்எல்-க்கு முழுமையாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் கார்டு கணக்கு உடனடியாக ரத்து செய்யப்படும். கார்டு கணக்கில் எந்தவொரு நிலுவைத் தொகையையும் தீர்ப்பது கார்டு உரிமையாளரின் வாரிசுகளின் பொறுப்பாகும், மேலும் சட்டரீதியான கட்டணங்கள் உட்பட அத்தகைய நிலுவைகளை மீட்பதில் ஏற்படும் அனைத்து செலவுகளுக்கும் எஸ்பிஐசிபிஎஸ்எல்-ற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். திரும்பக் கட்டப்பட வேண்டிய தொகைகள் நிலுவையில் இருக்கும் நிலையில், நிலவும் விகிதங்களில் எஸ்பிஐசிபிஎஸ்எல் தொடர்ச்சியாக நிதிக் கட்டணங்களை விதிக்கும்.

4. **தவணை தவறுதல்**

தவறு ஏற்பட்டால், கார்டு கணக்கில் இருக்கும் நிலுவையைத் தீர்ப்பதற்கு தபால், பேக்ஸ், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் செய்தி மற்றும்/அல்லது நினைவூட்டுவதற்கு மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்துவது, தொடர்-காணல் மற்றும் நிலுவைத் தொகையை வசூலிக்க, கார்டு உரிமையாளருக்கு அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும். எந்த மூன்றாம் நபர் தரப்பு அமர்த்தப்பட்டாலும், கடன் சேகரிப்பு தொடர்பான நடத்தை விதிகளை முழுவதுமாக கடைபிடிக்க கடமைப்பட்டுள்ளார்கள். கார்டு கணக்கில் உள்ள மொத்த நிலுவைத் தொகை, எந்தவொரு செலவினக் கட்டணங்களுடன் சேர்ந்து, இதுவரை கார்டு கணக்கில் வசூலிக்கப்படவில்லை என்றால், அது உடனடியாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் கார்டு உரிமையாளருக்கு திவால்நிலை அல்லது இறப்பு ஏற்பட்டால் எஸ்பிஜசிபிஎஸ்எல்-க்கு முழுமையாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் கார்டு கணக்கு உடனடியாக ரத்து செய்யப்படும். கார்டு கணக்கில் எந்தவொரு நிலுவைத் தொகையையும் தீர்ப்பது கார்டு உரிமையாளரின் வாரிசுகளின் பொறுப்பாகும், மேலும் சட்டரீதியான கட்டணங்கள் உட்பட அத்தகைய நிலுவைகளை மீட்பதில் ஏற்படும் அனைத்து செலவுகளுக்கும் எஸ்பிஜசிபிஎஸ்எல்-ற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். திரும்பக் கட்டப்பட வேண்டிய தொகைகள் நிலுவையில் இருக்கும் நிலையில், நிலவும் விகிதங்களில் எஸ்பிஜசிபிஎஸ்எல் தொடர்ச்சியாக நிதிக் கட்டணங்களை விதிக்கும்.

ஒரு கார்டு உரிமையாளரின் தவறை, ரிசர்வ் வங்கியிடம் பதிவுச் சான்றிதழ் பெற்று மற்றும் எஸ்பிஜசிபிஎஸ்எல் உறுப்பினராக உள்ள ஒரு கடன் தகவல் நிறுவனத்திற்கு புகாரளிப்பதற்கு முன், நாங்கள் கார்டு உரிமையாளருக்கு ஒரு மாதக்கால அறிவிப்பு வழங்குவோம். மேலும் ஒரு கார்டு உரிமையாளர், தவறியவர் எனத் தெரிவிக்கப்பட்ட பின், அவர்/அவள் நிலுவைத் தொகையை தீர்த்துவிட்டால், எஸ்பிஜசிபிஎஸ்எல் தவறியவர் நிலையைக் கடன் தகவல் நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெறும். இத்தகைய மாற்றங்கள் கார்டு உரிமையாளரின் கடன் அறிக்கையில் பிரதிபலிக்க 45-60 நாட்கள் ஆகலாம். எஸ்பிஜசிபிஎஸ்எல், அல்லது கார்டு உரிமையாளரின் தரவை, பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு முறையில் கடன் தகவல் நிறுவனத்துக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்புவார்கள். கடன் தகவல் நிறுவனம், 30 நாட்களுக்குள் தங்கள் சேவையகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தரவைப் பதிவேற்றும்.

எஸ்பிஜசிபிஎஸ்எல் தனது சொந்த தீர்மானத்தில் கார்ப்பரேட் கார்டுடன் சில காப்பீடுகளை வழங்கலாம். ஆனால், அதை எந்த நேரத்திலும் கார்ப்பரேட்டுக்கு அல்லது கார்டு உரிமையாளருக்கு முன்னறிவிப்பின்றி திரும்பப்பெற்றுக் கொள்வதற்கான உரிமையை பெற்று இருக்கிறது. எஸ்பிஜசிபிஎஸ்எல் அத்தகைய சலுகைகளைக் குறித்த விவரங்களை எல்லா நேரங்களிலும் தங்கள் வலைதளத்தில் புதுப்பித்து வைத்திருக்கும். புதுப்பிக்கப்பட்ட தகவல்களை www.sbicard.com-ஐ கார்ப்பரேட்டுகள்/கார்டு உரிமையாளர்கள் பார்க்க வேண்டும். கார்ப்பரேட் கார்டு வழங்கப்பட்ட நாளிலிருந்து கார்ப்பரேட் கார்டு உரிமையாளருக்கு தொடர்புடைய காப்பீட்டுத் தொகை பொருந்தும் மற்றும்/அல்லது செயல்படுத்தப்படும்.

5. **கார்டு ஹோல்டர்ஷிப்பை இரத்து செய்தல்/திரும்பப் பெறுதல்**

a) கார்ப்பரேட் கார்டு திட்ட மேலாளர் அல்லது கார்டு உரிமையாளர் எந்த நேரத்திலும் கார்ப்பரேட் கார்டு திட்ட மேலாளரின் ஒப்புதலுடன் எஸ்பிஜசிபிஎஸ்எல்-க்கு எழுதுவதன் மூலம் அல்லது எஸ்.பி.ஐ.கார்டு ஹெல்ப்லைனை அழைப்பதன் மூலம் கார்டை (களை) குறுக்காக வெட்டுவதன் மூலம் ஒப்பந்தத்தை முடிக்கலாம்.கார்டு உரிமையாளர் கார்டு கணக்கில் நிலுவையில் உள்ள அனைத்து தொகையையும் செலுத்திய பிறகு முடித்தல் செயலாக்கப்படும். சரிசம வீத அடிப்படையில் எந்த சேரும் கட்டணம் அல்லது புதுப்பித்தல்/வருடாந்திர கட்டணங்கள் திரும்ப வழங்கப்பட மாட்டாது.

b) எஸ்பிஜசிபிஎஸ்எல் மற்றும் அதன் வாடிக்கையாளருக்கு பொருந்தும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் கீழ், எஸ்பிஜசிபிஎஸ்எல் வணிகம் அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக நியாயம் என்று நினைத்தால், மற்றும்/அல்லது எந்தவொரு சட்ட அமலாக்க நிறுவனம், மற்றும்/அல்லது எந்தவொரு அரசாங்க அதிகாரத்தின் கோரிக்கையின் பெயரில் எஸ்பிஜசிபிஎஸ்எல் எந்த நேரத்திலும் முன் அறிவிப்பின்றி கார்டு உரிமையாளர் கணக்கின் பயன்பாட்டை கட்டுப்படுத்தலாம், நிறுத்தலாம் அல்லது நீக்கலாம்.

c) கார்டு உரிமையாளர் கட்டணைத் தவணையைக் கட்டாமல் இருந்தாலோ, கடன் வரம்பை மீறினாலோ எஸ்பிஜசிபிஎஸ்எல் கார்ப்பரேட் கார்டு வசதியை இடை நீக்கம் செய்யலாம். கார்டு கணக்கு இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது ஒப்பந்தத்திற்குப் பிறகோ அந்த கார்டைப் பயன்படுத்தக்கூடாது. இத்தகைய சூழ்நிலையில், கார்டு உரிமையாளர் (எந்தவொரு தவறு அல்லது சட்டத்தால் தேவைப்படும் மற்ற அறிவிப்புக்கு உட்பட்டு) உடனடியாக கணக்கில் நிலுவையில் உள்ள மொத்த நிலுவைத் தொகையையும் எஸ்பிஜசிபிஎஸ்எல்-க்கு செலுத்த வேண்டும். இதில் ஒப்பந்தத்தின்படி எஸ்பிஜசிபிஎஸ்எல்-ற்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து நிலுவைகள், அனைத்து விதமான பரிவர்த்தனைகள் மற்றும் கணக்கில் இன்னும் விதிக்கப்படாத மற்ற தொகை ஆகியவை உட்படும். கார்டு உரிமையாளர் தனது அனைத்து தவணைத் தொகையை கட்டி முடிக்கும் வரை, கார்டு உரிமையாளரின் கணக்கு மூடப்பட்டதாக கருதப்படாது.

6. **இழப்பு/திருட்டு/கார்டை தவறாக பயன்படுத்துதல்**

a) கார்ப்பரேட் கார்டு வைக்கப்பட்ட இடம் தெரியாமல் போனாலோ அல்லது தொலைந்தாலோ, மாற்றி எடுத்துச் செல்லப்பட்டாலோ, திருடப்பட்டாலோ, சிதைக்கப்பட்டாலோ, குறிப்பிட்ட தேதிக்குள் கிடைக்கப் பெறாமல் இருந்தாலோ, கார்டு உரிமையாளரின் அனுமதி இல்லாமல் கார்ப்பரேட் கார்டு பயன்படுத்தப்படுகிறது என சந்தேகித்தாலோ கார்டு உரிமையாளர் எஸ்பிஜ கார்டு உதவிமையம் மூலமாக உடனடியாக எஸ்பிஜசிபிஎஸ்எல்லுக்கு தெரிவிக்க வேண்டும். ஒருமுறை கார்டு தொலைந்துவிட்டதாக புகார் அளிக்கப்பட்டு, அது தற்செயலாக மீண்டும் கிடைக்க நேர்ந்தால், எந்த சூழ்நிலையிலும் அதைப் பயன்படுத்தக்கூடாது. கார்டு உரிமையாளர் அதை இரண்டாக வெட்டி விட வேண்டும்.

- கார்டு உரிமையாளர் ஐவிஆர் மூலமாகவும், www.sbicard.com என்னும் வலைதளத்தின் மூலமாகவும், பியுஎல்எல் எஸ்எம்எஸ் மூலமாகவும் இந்த கார்டை முடக்க முடியும்.
- தொலைந்த/இழந்த கார்டைக் குறித்த தகவலை பியுஎல்எல் எஸ்எம்எஸ் மூலமாக அனுப்புவதற்கு, உங்கள் பதிவு செய்யப்பட்ட எண்ணிலிருந்து SMS BLOCK XXXX என 5676791 எண்ணிற்கு அனுப்பி முடக்கவும். (XXXX = உங்கள் கார்டு எண்ணின் கடைசி 4 எண்கள்). உங்கள் கோரிக்கைக்குப் பிறகு 5 நிமிடத்திற்குள் உறுதிப்பாட்டைப் பெறவில்லையென்றால், கார்டு முடக்கப்பட்டதாக கருத வேண்டாம். தவறான எந்த பயன்பாட்டையும் தடுப்பதற்கு உதவி மைய எண்ணுக்கு உடனடியாக அழைத்து கார்டை முடக்கவும்.

b) கார்டு உரிமையாளர் நிகழ்ந்திருக்கும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள், கார்டு இழப்பு மற்றும்/அல்லது கார்டு திருட்டு அல்லது தொலைந்தது குறித்து தகவல் அளிப்பதற்கு பல சேனல்களில் ஏதாவது ஒன்றின் மூலமாக எஸ்பிஐசிபிஎஸ்எல்-க்கு புகாரளிக்க வேண்டும். வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் பொறுப்பைக் கட்டுப்படுத்துதல்" குறித்த வழிமுறைகளின் அடிப்படையில் மற்றும் அதற்கேற்ப எந்தவொரு அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகளுக்கும் எஸ்பிஐசிபிஎஸ்எல் பொறுப்பாகும்.
கார்டு இழப்பை எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு புகார் தெரிவிப்பதற்கு முன்பாகவே கார்டில் நடந்த எந்த பரிவர்த்தனைக்கும் எஸ்பிஐசிபீஎஸ்எல் பொறுப்பாகாது. ஒருவேளை புகார் அளிக்கப்பட்டு எஸ்பிஐசிபீஎஸ்எல் தரப்பில் செயல்பாடுகளில் குறைபாடு நிகழாமல் இருந்தாலன்றி கார்டு உரிமையாளரே அதற்கு தான் முழு பொறுப்பாவார்கள். எஸ்பிஐசிபிஎஸ்எல் (வலைத்தளம், தொலைபேசி வங்கி, எஸ்.எம்.எஸ், மின்னஞ்சல், ஐ.வி.ஆர் அல்லது பிரத்யேக ஹெல்ப்லைன் வழியாக) இழப்பைப் பற்றிய சரியான அறிவிப்பைப் பெற்ற பிறகு, கார்டு உரிமையாளரின் அடுத்த கடன்பாடு அதிகபட்சமாக ரூ. 1000 ஆக கட்டுப்படுத்தப்படும். கார்டு இழப்பு அல்லது திருட்டு குறித்து எஸ்பிஐசிபிஎஸ்எல்-க்கு அறிவிப்பதைத் தவிர, கார்டு உரிமையாளர் கார்ப்பரேட் கார்டு(கள்) திருட்டுப் பற்றி காவல்துறையிடம் புகாரளித்து எஃப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும். எவரேனும் கார்டு உரிமையாளரின் சம்மதத்துடன் கார்டை பெற்று கார்டு அல்லது பின் எண்ணைப் பெற்று தவறாக பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு கார்டு உரிமையாளரே பொறுப்பாவார்.

c) கார்டு உரிமையாளர் கார்டை முறைகேடாக பயன்படுத்தியிருந்தால் அனைத்து இழப்புகளுக்கும் காரணமாக அவரே இருப்பார். முறையான அக்கறையுடன் கார்டு உரிமையாளர் செயல்படாமல் இருந்தால், இழப்பீடுகளுக்கு கார்டு உரிமையாளரே பொறுப்பேற்க வேண்டும். எஸ்பிஐசிபிஎஸ்எல் குறிப்பிட்டிருக்கும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் இருந்தாலும் இதே விதிகள் கடைபிடிக்கப்படும்.

d) இந்திய ரிசர்வ் வங்கியின் மேண்டேட் படி, வாடிக்கையாளர் பாதுகாப்பு ஜூலை 6, 2017 - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களுக்கான வரம்பை கட்டுப்படுத்துவது அங்கீகரிக்கப்படாத கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகளில்

வாடிக்கையாளரின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் குறைதீர்ப்பு கொள்கை" என்பதிலும் எஸ்பிஐ கார்டின் வலைதளத்திலும் இது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படையான கொள்கைகள் மற்றும் வாடிக்கையாளர்களை நடத்துவதில் சரியான விதங்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

e) எஸ்பிஐசிபிஎஸ்எல், கார்டு உரிமையாளர் அல்லது கூடுதல் கார்டு உரிமையாளரிடம் குறிப்பிடாமல், ஒரு கார்டு அல்லது PIN இழப்பு, திருட்டு அல்லது தவறாகப் பயன்படுத்துவது குறித்து எஸ்பிஐசிபிஎஸ்எல் கருதுகின்ற எந்த தகவலையும் காவல்துறை அல்லது மற்றத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு வழங்கலாம்.

f) உங்கள் கார்ப்பரேட் கார்டு கணக்கின் தொடர்பு விவரங்களில் நிகழும் மாற்றங்கள், அமைப்பில் உள்ள உங்களின் புதிய மற்றும் முந்தைய தொடர்பு விவரங்களுக்கு தெரிவிக்கப்படும். உங்கள் தற்போதைய தொடர்பு விவரங்களை எங்கள் பதிவுகளில் புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## 7. வெளிப்படுத்துதல்

கார்டு உரிமையாளரைப் பற்றி தெரிவிக்கும் நோக்கம் குறித்து போதுமான அறிவிப்பை வெளியிட்ட பின்னரே, தற்போதுள்ள அல்லது எதிர்கால கடன் பணியகங்களுடன் கார்டு உரிமையாளர் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள எஸ்பிஐசிபிஎஸ்எல்-ற்கு அதிகாரம் அளித்திருப்பதாக கார்டு உரிமையாளர் ஒப்புக்கொள்கிறார், மேலும் இதுபோன்ற தகவல்கள் கார்டு உரிமையாளரின் நேர்மறை அல்லது எதிர்மறை செயல்திறன்/தவறு தொடர்பானதாக இருக்கலாம். இந்த புதுப்பித்தல்கள் கடன் பணியகம் அறிக்கையில் வெளிப்படுவதற்கு 45 - 60 நாட்களாகும். கிரெடிட் இன்ஃபர்மேஷன் ப்யூரோ இந்தியா லிமிடெட் (CIBIL), ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய அரசின் ஒரு முயற்சியாகும். இந்திய நிதி அமைப்பின் நிலையானதன்மையையும், செயல்பாட்டையும் மேம்படுத்துவதற்கான முயற்சியாகும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்துக்கான திறமையான வழியை வழங்கி, பல்வேறு நிறுவனங்களில் இருந்தும் சிறந்த கடன் உதவிகளைப் பெறுவதற்கு கார்டு உரிமையாளர்களுக்கு
உதவும் பொருட்டு எடுக்கப்பட்ட ரிசர்வ் வங்கியின் முயற்சியாகும். கார்டு உரிமையாளரின் தகவல், கட்டணச் செலுத்தல் தவறுதல் உட்பட கார்டு கணக்குகள், சரிபார்ப்பு மற்றும் பிற நிர்வாக சேவைகளின் சரியான செயல்பாட்டிற்கு நிதி நிறுவனம், முதலாளி மற்றும் எஸ்பிஐசிபிஎஸ்எல் ஈடுபடுத்திய மூன்றாம் தரப்பினருக்கு எஸ்பிஐசிபிஎஸ்எல் பகிர்வதை கார்டு உரிமையாளர் ஏற்றுக்கொள்கிறார். எஸ்பிஐசிபிஎஸ்எல் அல்லது அதன் குழு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், துணை மற்றும்/அல்லது கூட்டாளிகளின் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்த மற்றும் வழங்கும் நோக்கங்களுக்காக, எஸ்பிஐசிபிஎஸ்எல்-இன் எந்தவொரு தலைமை, துணை நிறுவனம், துணை அல்லது கூட்டாளருடன் எஸ்பிஐசிபிஎஸ்எல் கார்டு உரிமையாளரின் தகவலை பகிந்துக்கொள்ளலாம்.

www.sbicard.com என்ற தளத்திலும் எஸ்பிஐ கார்டு குறித்த மிக முக்கிய விதிகளும் நிபந்தனைகளும் உள்ளது

**முக்கியமான விதிமுறைத் தகவல்**

- இந்தக் கார்டு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பயன்படுத்துவதற்கு உகந்தது. எனினும், நேபால் மற்றும் பூட்டானில் வெளிநாட்டு பணப் பரிவர்த்தனைகளைச் செய்வதற்கு செல்லுபடியாகாது.
- கார்டின் பயன்பாடு இந்தியாவுக்கு வெளியில் பரிவர்த்தனை செய்வதற்கு பொருந்தக்கூடிய சட்டத்தின்படி செய்யப்பட வேண்டும் ரிசர்வ் வங்கியின் பரிவர்த்தனை மேலாண்மை விதிமுறைகள் மற்றும் அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம், 1999 உட்படும். இணைய வர்த்தக போர்ட்டல்களின் வழியாக அன்னிய செலாவணி வர்த்தகத்துக்கு அனுமதியில்லை. இணக்கம் இல்லாமல் ஏதேனும் அத்துமீறல் இருந்தாலோ, விதிகளுக்கு உட்படாமல் இருந்தாலோ, தண்டனைக்கு உட்படுத்தப்படுவீர்கள். அன்னிய செலாவணி மாற்ற தகுதி நிலைப்பாடு குறித்து அறிய அங்கீகரிக்கப்பட்ட முகவரை (ஏடி) அணுகவும்.
- உங்களுக்கு கார்ப்பரேட் கார்டு கணக்கில் ஏதேனும் கடன் இருப்பு இருந்தால், இந்த கடன் நிலுவைத் தொகையை உங்களுக்குத் திருப்பி அளிக்க எஸ்பிஐ கார்டுக்கு உரிமை உண்டு.
- வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்தல் அல்லது வெளிநாடுகளில் நிறுவனங்களை அமைத்தல் போன்ற மூலதன கணக்கு பரிவர்த்தனைகளுக்கு பணம் அனுப்ப/பணம் செலுத்துவதற்கு கார்ப்பரேட் கார்டுகளைப் பயன்படுத்த வேண்டாம். ஏனென்றால், இது ரிசர்வ் வங்கியின் முதன்மை இயக்கத்தின் கீழ் நிதியளிப்பதற்கான அனுமதிக்கப்பட்ட முறை அல்ல - கூட்டுத் தொழில்/முழுக்க சொந்தமான துணை நிறுவனத்தில் வெளிநாடுகளில் வசிப்பவர்களின் நேரடி முதலீடுகள்.
- ரிசர்வ் வங்கியின் மாஸ்டர் சுற்றறிக்கை- குடியிருப்பாளர்களுக்கான இந்தியா வசதிகளிலிருந்து இதர பணம் அனுப்புதல் குறித்த மாஸ்டர் சுற்றறிக்கையின் படி, லாட்டரி சீட்டுகள், தடைசெய்யப்பட்ட அல்லது பகிஷ்கரிக்கப்பட்ட பத்திரிகைகள், ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்பது, கால்-பேக் சேவைகளுக்கான கட்டணம் போன்ற தடைசெய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு கார்ப்பரேட் கார்டைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. , அத்தகைய பொருட்கள்/செயல்பாடுகளுக்கு அந்நிய செலாவணி வரைவிற்கு அனுமதி இல்லை. குடிமக்களுக்கான இந்திய ஏற்பாட்டின் படி இந்தியாவிலிருந்து இதர வகை பணம் அனுப்புதல் குறித்து அறிய மாஸ்ட்டர் சுற்றறிக்கையை கூடுதல் விவரங்களுக்கு பார்க்கவும்.

## 8. கட்டணங்களின் அட்டவணை

| கட்டணம் | பிளாட்டினம் சிக்நேச்சர் விர்ச்சுவல் கார்டு | | |
|---|---|---|---|
| சேர்தல் கட்டணம் (ஒருமுறை) | பூஜ்யம் | பூஜ்யம் | பூஜ்யம் |
| வருடாந்திரக் கட்டணம் (p.a.) | பூஜ்யம் | ரூ. 499 | பூஜ்யம் |
| **நீட்டிக்கப்பட்ட கடன்** | | | |
| வட்டியில்லாக் கடன் காலம் | 20-50 நாட்கள் (முந்தைய மாத நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால் மற்றும் சில்லறைக் கொள்முதலுக்கு மட்டும் பொருந்தும்)<br>15-32 நாட்கள் (எஸ்பிஐ கார்ப்பரேட் யுடிலிட்டி கார்டாக இருந்தால் மட்டும் பொருந்தும்) | | |
| நிதிக் கட்டணம்# | பரிவர்த்தனை தேதியிலிருந்து மாதம் 3.35% வரை. (ஆண்டுக்கு 40.2%) (இது ஒரு கட்டணக் கார்டு மற்றும் சுழலும் வசதியை வழங்காது) | | |
| செலுத்த வேண்டிய மொத்தத் தொகை | மொத்த நிலுவை பாக்கி | | |
| **தொகை முன்பணக் (பொருந்தினால்)** | | | |
| ரொக்க முன்பண வரம்பு (பொருந்தினால்) | மாறி | | |
| இலவச கடன் காலம் | எதுவும் இல்லை | | |
| நிதிக் கட்டணம்# | திரும்பப் பெற்ற தேதி முதல் மாதம் 3.35% வரை (ஆண்டுக்கு 40.2%) | | |
| **ரொக்கக் முன்பணக் கட்டணம் (பொருந்தினால்)** | | | |
| எஸ்பிஐ ஏடிஎம்கள்/மற்ற உள்ளூர் ஏடிஎம்கள் | திரும்பப் பெறும் தொகையில் 2.5% வரை அல்லது ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 450 (WIH) வரை | | |
| சர்வதேச ஏடிஎம்கள் | திரும்பப் பெறும் தொகையில் 3% வரை அல்லது ஒரு பரிவர்த்தனைக்கு ரூ .450 (WIH) வரை | | |
| **மற்ற செலவினங்கள் & கட்டணம் (பொருந்தினால்)** | | | |
| ரொக்கக் செலுத்தல் கட்டணம் | ரூ. 100 | | |
| செக் பிக்-அப் | ரூ. 90 | | |
| அறிக்கை மீட்டெடுப்புக் கட்டணம்: | எதுவும் இல்லை | | |
| செக் கட்டணம் | ரூ. 100 (செக் கட்டணம் ரூ. 2000 வரை) | | |
| கட்டண அவமதிப்புக்கான அபராதம் | கட்டணத் தொகையில் 2% (குறைந்தபட்சம் 350 ரூபாய்க்கு உட்பட்டது) | | |

| | |
|---|---|
| **தாமதக் கட்டணம்** | **மொத்த தவணைத் தொகை ரூ. 0-200-க்குள் இருந்தால், எதுவும் இல்லை;**<br>**மொத்த தவணைத் தொகை ரூ. 200-க்கு மேற்பட்டு ரூ. 500-க்குள் இருந்தால், ரூ. 100.**<br>**மொத்த தவணைத் தொகை ரூ. 500-க்கு மேற்பட்டு ரூபாய் 1000-க்குள் இருந்தால், ரூ. 400.**<br>**மொத்த தவணைத் தொகை ரூ. 1000-க்கு மேற்பட்டு ரூ. 10,000-க்குள் இருந்தால், ரூ. 500.**<br>**மொத்தத் தொகை ரூ. 10,000-ற்கு அதிகமாக இருந்தால் ரூ. 750 ஆக இருக்கும்** |
| அதிகவரம்பு | கார்ப்பரேட் கார்டிற்கு பொருந்தாது |
| அவசரக் கார்டு மாற்றீடு | இலவசம் |
| அன்னியச் செலாவணி பரிவர்த்தனை | மாற்றுதல் மார்க் அப்: 3.5% வரை |
| வருடாந்திர முன்னுரிமை பாஸ் கட்டணம் | பிளாட்டினத்திற்கு ரூ. 180 மற்றும் சிக்நேச்சருக்கு இலவசம் |
| முன்னுரிமை பாஸ் லவுஞ்ச் கட்டணம் | முன்னுரிமை பாஸ் திட்டத்தின் மூலம் இந்தியாவிற்குள்ளும், வெளியிலும் உள்ள அனைத்து விமான நிலைய லவுஞ்ச் வருகைகளுக்கும், ஒரு வருகைக்கு $ 27 + கட்டணம் + பொருந்தும் வரி விதிக்கப்படும்.<br>மேலும் விவரங்களுக்கு sbicard.com-இல் பார்க்கவும்<br>முன்னுரிமை பாஸ் வைத்திருக்கும் எஸ்பிஐ கார்டு உரிமையாளருடன் விமான நிலைய லவுஞ்சிற்கு வரும் அனைத்து விருந்தினர்களுக்கும் ஒரு வருகைக்கு கட்டணம் $27 + பொருந்தக்கூடிய வரி வசூலிக்கப்படும். |
| வருடாந்திர வெகுமதிக் கட்டணம் | ரூ. 300 வரை |
| வெகுமதி மீட்புக் கட்டணம் | ரூ. 99 |

| சர்சார்ஜ் | |
|---|---|
| ரயில்வே டிக்கெட் - ரயில்வே கவுண்டர்கள் | பரிவர்த்தனைத் தொகையில் ரூ. 30 + 2.5% |
| ரயில்வே டிக்கட்கள் www.irctc.co.in | பரிவர்த்தனை மதிப்பில் 1.8% + சேவை கட்டணம், பரிவர்த்தனை மதிப்பில் 1% பொருந்தும். |
| பெட்ரோல் மற்றும் பெட்ரோல் பம்புகளில் விற்கப்படும் அனைத்து தயாரிப்புகள்/ சேவைகள் | சிக்நேச்சர் மற்றும் பிளாட்டினம் கார்டுகளுக்கு ரூ. 500 முதல் ரூ. 4000 வரை செலவு செய்யப்பட்ட ஒற்றைப் பரிவர்த்தனைக்கு 1% கூடுதல் கட்டணம் தள்ளுபடி (பொருந்தக்கூடிய எல்லா வரிகளையும் தவிர + பிற கட்டணங்கள்)<br><br>சிக்நேச்சர் மற்றும் பிளாட்டினம் கார்டுகளுக்கான கார்ப்பரேட் கார்டு கணக்கிற்கு ஒரு அறிக்கை சுழற்சிக்கு ரூ .250 அதிகபட்ச கூடுதல் தள்ளுபடி |
| சுங்க வரி செலுத்துதல் | பரிவர்த்தனைத் தொகையில் 2.25% (குறைந்தபட்சம் ரூ .75 க்கு உட்பட்டது) |
| கட்டணம் செலுத்தும் வரிசை | மொத்தத் நிலுவைத் தொகை (இது பொருந்தக்கூடிய வரிகளை உள்ளடக்கியது), அதைத் தொடர்ந்து கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள், வட்டிக் கட்டணங்கள், சில்லறை நிலுவை மற்றும் ரொக்க முன்பணம். |

* கட்டணங்களின் அட்டவணையில் இருக்கும் மாற்றங்கள் மின்னஞ்சல் வழியாகவும், வலைதளமான www.sbicard.com வழியாகவும் தெரிவிக்கப்படும்

# கார்டு வட்டி விகிதம் மாறிக்கொண்டே இருக்கும். கார்டு உரிமையாளரின் பயன்பாட்டைப் பொருத்தும், கட்டணம் செலுத்தும் முறைகளைப் பொருத்தும், காலவாரியான மதிப்பீடுகளின் அடிப்படையிலும் கார்டுக்கான நிதி கட்டணங்கள் மாற்றத்துக்கு உள்ளாகும்.

அனைத்து கட்டணங்கள், வரிக் கட்டணம் மற்றும் செலவினங்களுக்குப் பொருந்தக் கூடிய அனைத்து வரிக் கட்டணங்களும் விதிக்கப்படும்.

“பொருந்தும் வரிகள்” (ஜூலை 1, 2017 அன்று அல்லது அதற்குப் பிறகு வழங்கப்படும் அறிக்கைகள்) என்றால்:

- அறிக்கை தேதியில் எஸ்பிஐ பதிவுகளில் வசிக்கும் மாநிலம் ஹரியானா என குறிப்பிடப்பட்டுள்ள கார்டு உரிமையாளர்களுக்கு - “ஹரியானா” - மைய வரி @ 9% மற்றும் மாநில வரி @ 9%

- அறிக்கை தேதியில் எஸ்பிஐ பதிவுகளில் வசிக்கும் மாநிலம் "ஹரியானா"வைத் தவிர மற்றவை என குறிப்பிடப்பட்டுள்ள கார்டு உரிமையாளர்களுக்கு - ஒருங்கிணைந்த வரி @18%

உங்கள் தொடர்ச்சியான கார்டு பயன்பாடு, இந்தத் திருத்தங்களுக்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் என்பதை உணர்த்துகிறது.

## எஸ்பிஐ கார்டு உதவிமையம்

39 02 02 02 (உள்ளூர் எஸ்டீடி குறியீட்டை முன்சேர்க்கவும்), 1860 180 1290

இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகள் & நிபந்தனைகள் (கட்டணங்களின் திட்டமிடல் உட்பட) நிலையான நிபந்தனைகளாகும். மேலும் அனைத்து கார்ப்பரேட்டுகளுக்கும் இந்த கட்டணங்கள் பொருந்தும். இதில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் எஸ்பிஐசிபிஎஸ்எல் மற்றும் தொடர்புடைய கார்ப்பரேட்டுக்கு இடையே இருதரப்பும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது தனித்த பின்னிணைப்பு வழியாகவோ அல்லது கார்ப்பரேட் கார்டு ஒப்பந்தத்தின் பகுதியாகவோ கார்ப்பரேட்டுடன் கையெழுத்தாகும்.

அக்டோபர் 2019-இன் படி இதில் உள்ள அனைத்து தகவல்களும் இந்த செய்தி தொடர்பில் சரியானவை. எஸ்பிஐசிபிஎஸ்எல்-இன் முடிவுக்கு ஏற்ப மாற்றத்துக்கு உட்பட்டவை. www.sbicard.com என்ற தளத்திலும் எஸ்பிஐ கார்டு குறித்த மிக முக்கிய விதிகளும் நிபந்தனைகளும் உள்ளது

எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமென்ட் சர்வீசஸ் லிமிடெட்.
பி.ஓ. பேக் எண். 28, புதுதில்லி - 110 001
எங்கள் வலைதளத்தைப் பார்வையிடவும்: www.sbicard.com

Individual Liability SI21102019